கூடுதல் மாவட்ட  நீதிமன்றம், திண்டுக்கல்

அமர்வு வழக்கு எண். 159 /2025

**அ.சா. 1 (LW 3 )**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு.இந்திரஜித்** | **தொழில்** | |
| **த/ பெயர்** | | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **24.03.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

எதிரி VC மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது தேனிமாவட்டம் பிசி.பட்டியில் குடியிருந்து டயர் கம்பெனியில் நிர்வாக பணி செய்து வருகிறேன். 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் பிறந்தது முதல் திண்டுக்கல்லில் இருந்து வந்தேன். 3 வருடங்களுக்கு முன்பு தான் தேனி மாவட்டத்திற்கு சென்றேன். காணொலியில் ஆஜராகியுள்ள எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 28 ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு நாள் கோட்டைக்குளத்தில் ஒரு ஆண் பிரேதம் கிடப்பதாக சொன்னார்கள். நானும் போய் பார்த்தேன். வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள். வேறு எதுவும் தெரியாது.

**இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநியம் சட்டம் பிரிவு 157 ன் கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் ஆர்விநகரில் குடியிருந்து வந்தேன் என்றால் சரிதான். அது மலைக்கோட்டையை சுற்றியுள்ள பகுதி என்றால் சரிதான். அந்த மலைக்கு கீழே தான் கோட்டைக்குளம் உள்ளது. அதன் அருகில்வ குமரன் பார்க் உள்ளது. 28 வருடத்திற்கு முன்பாக எங்கள் வீட்டிலிருந்து மலம் கழிப்பதற்காக கோட்டைக்குளம் குமரன் பார்க் உள்ள பகுதிக்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். நான் ஆஞ்சநேயர் கோவிலுக்கு முன்பு அமர்ந்து மனுக்கள் எழுதுவேன் என்றால் சரிதான். பகலில் அந்த பகுதியில் நடக்கும் விசயங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மூக்கனை எனக்கு தெரியும். எங்கள் பகுதியில் இருக்கும் ரவி, ஹக்கீமை தெரியாது. ரமேஷ் எங்கள் பகுதியில் குடியிருக்கிறார். போலிசார் விசாரணையில் கடந்த 15.04.1998ம் வருடம் இரவு

11.30 மணிக்கு நானும் மூக்கனும் சேர்ந்து குமரன் பார்க் பகுதிக்கு பாத்ரூம் போவதற்காக சென்றதாகவும் அப்போது அங்கு சென்ற போது ரவி, ரமேஷ், ஹக்கீம் ஆகியோர்கள் இருந்ததாகவும், அப்போது அவர்களுடன் சேர்ந்து வழக்கில் இறந்து போன சுரேஷ் குமார் இருந்தார் என்றும் அப்போது அங்கிருந்தவர்கள் சுரேஷ்குமார் மலைக்கோட்டைக்கு இழுத்து வாருங்கள் என சொன்னதாகவும், அப்போது ஹக்கீம் சுரேஷ்குமாரை கத்தியை வைத்து வயிற்றுப் பகுதியில் குத்தியதை நானும் மூக்கனும் பார்த்ததாகவும், ஹக்கீம் சுரேசின் கழுத்தை அறுத்ததை நான் பார்த்தேன் என்றாலும் அப்போது நான் பார்த்துக் கொண்டிருந்ததை ரவி பார்த்து விட்டார் என்றும் ரவி உடனே எங்களை இதை வெளியில் சொன்னால் உங்களை கொலை செய்து விடுவேன் என சொன்னார் என்றும், அந்தவிசயத்தை வெளியே சொல்லாமல் மறுநாள் குளத்தில் கிடந்த சுரேஷ்குமாரை நானும் போய் பார்த்ததாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. ரவி,ரமேஷ் , ஹக்கீம் ஆகியோர்கள் எங்கள் பகுதியை சேர்ந்த ரவுடி என்பதாலும் அவர்களை வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தைதான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்பதைத்தான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆர்வி நகர் திண்டுக்கல் நகர் தெற்கு காவல்நிலைய இடது பக்கம் சுமார் 100 மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். ஆர்வி நகர் என்பது 1998ல் சுமார் 200 வீடுகள்தான் இருக்கும். அந்த ஆர்வி நகருக்கு பின்னால் பேகம்பூரிலிருந்து வரும் பெரிய சாக்கடை ஒன்று உள்ளது. ஆர்வி நகரை தாண்டி மலைக்கோட்டையை சுற்றி முத்தழகுபட்டி செல்லும் போது தோட்டங்கள் உள்ளது என்றால் சரிதான். ஆர்வி நகர் அருகே அந்தோணியார் கரடு உள்ளது. ஆர்வி நகர் அருகே கிழக்கு பக்கம் முருகன் கோவிலை ஒட்டி காடுகள் உள்ளது. பொதுமக்கள் காலை கடனை கழிக்க செல்லும் பாத்ரூம் உள்ளது என்றால் ஆண்களுக்கு மட்டும் பாத்ரூம் உள்ளது. பெண்களுக்கு அந்தோணியார் கரடை ஒட்டி முள்காடுகள் உள்ளது. ஆர்விநகரிலிருந்து கோட்டைக்குளத்துக்கு நேரடியாக வரமுடியாது என்றால் சரிதான். அவ்வாறு வரும் வழியில் திண்டுக்கல் நகர் தெற்கு காவல்நிலையம், கோட்டை மாரியம்மன் கோவில், அரசாங்க பள்ளி ஒன்றும் அதை எதிர்த்தாற் போல் ஒரு விளையாட்டு அரங்கம் உள்ளது. அதை ஒட்டி குமரன் பூங்கா உள்ளது. குமரன் பூங்காவை ஒட்டி திண்டுக்கல் காந்தி மார்க்கெட்ட உள்ளது. அந்த பாதைக்கு குமரன் பூங்காவிற்கு வரவேண்டும் என்றால் சௌந்தரராஜா பெருமாள் கோவில் வழியாக வரமுடியும். திண்டுக்கல் நகர் தெற்கு காவல்நிலையத்திற்கு முன்பு பெரிய கிரவுண்ட் உள்ளது. அந்த பெரிய கிரவுண்டுக்கும் மலைக்கோட்டைக்கும் இடையில் அய்யப்பன் கோவில், ஆஞ்சநேயர் கோவில் உள்ளது. அந்த கோவிலுக்கு பின்னால்தான்கோட்டைக்குளம் அமைந்துள்ளது என்றால் சரிதான். கோட்டைக்குளத்துக்கு போக வேண்டும் என்றால் குமரன் பூங்காவின் தென்பகுதி சென்றுதான் செல்ல வேண்டும். அந்த பகுதி ஆர்விநகரிலிருந்து தள்ளி உள்ள பகுதி என்றால் சரிதான்.

<u>**மறு விசாரணை -இல்லை.**</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.24 21:00:10 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.